[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 18

பொன்னப்ப நாடார், ஜோதி வெங்கடாச்சலம், திருப்பூர் மொகைதீன், ஹாஜா ஷெரீப், உமாநாத், கல்யாணசுந்தரம், ரமணி, தங்கமணி, மூக்கைய்யா தேவர், அப்துல் சமது, ஹண்டே, சங்கரய்யா, திண்டுக்கல் பாலசுப்பிரமணியம், அரங்கநாயகி, இப்படிப்பட்ட பெருந்தலைவர்களோடு நானும் உட்கார்ந்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்களெல்லாம் இல்லை. ஆனாலும் அவர்களிடம் நான் கற்ற பாடத்தை மறக்கவில்லை. எனவே, நீண்ட காலம் இந்த அவையில் இருக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால், அதிலே முக்கியமாக என்னால் மறக்க முடியாதவராக என் பக்கத்து seat, மூன்றாவது இடத்தில் உட்கார்ந்திருந்தவர் அண்ணன் இளையபெருமாள் அவர்கள். அவருக்கு இன்றைக்கு ஒரு நினைவரங்கத்தை உருவாக்கவிருக்கிறார். அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நல்ல எண்ணத்திற்காக தளபதியை நான் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இளம் வயதில், இந்த இளம் உள்ளத்தில்—உருவத்தில்தான் நீங்கள் இளையவராகத் தெரிகிறாய்; ஆனால் உள்ளத்தில் உங்கள் அப்பாவை உள்ளே வாங்கி அடக்கியிருக்கிறாய் என்று நான் பெருமைப்பட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என் வாழ்த்தைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

4. தகவல் கோரல்

கோவை வனக் கோட்டம், தொண்டாமுத்தூர் தொகுதி, மதுக்கரை வனச் சரகம், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், சொல்லுங்கள்.

*__திரு. எஸ்.பி. வேலுமணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைக்குட்பட்ட தொண்டாமுத்தூர் தொகுதியில், மதுக்கரை வனச் சரகத்திற்குட்பட்ட பெருமாள் கோவில்பதி, பச்சினான்பதி உள்ளிட்ட வனப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக காட்டுத் தீ சுமார் 5 கிலோ மீட்டர் சுற்றளவு வனப் பகுதியில் எரிந்து வருகிறது. காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த வனத் துறையினரும், தீயணைப்புத்

2023 ஏப்ரல் 18] [திரு. எஸ்.பி. வேலுமணி]

துறையினரும் கடுமையாகப் போராடியும் கட்டுப்படுத்த இயலாமல், மாவட்ட நிர்வாகத்தின் கோரிக்கையின்படி சூலூர் விமானப் படை தள helicopter-மூலம் மலம்புழா அணையிலிருந்து தண்ணீர் எடுத்து 16-4-2023-ல் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

காட்டுத் தீ காரணமாக இயற்கை மரங்கள், வன விலங்குகள், வனப் பகுதியைச் சுற்றி வாழும் மலைவாழ் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வனத் துறையினர் காட்டுத் தீ ஏற்பட்டவுடன், விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால், தீ பரவாமல் கட்டுப்படுத்தியிருக்கலாம். வருகின்ற மே மாதம் கடும் வெயில் இருக்கும் என்பதால், கூடுதல் கண்காணிப்புடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி தொடர்ந்து ஆங்காங்கே ஏற்படுகிற காட்டுத் தீயை அணைப்பதற்காக ஒரு நிரந்தரமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன். கோவை வனக் கோட்டத்திற்குட்பட்ட மதுக்கரை வனச் சரகத்தில் 11-4-2023 அன்று மாலை சுமார் 5-30 மணியளவில் கரடிமடை பிரிவு, மங்கலப்பாளையம் கிழக்கு சுற்றுக்குட்பட்ட சாய்காரமடை சரகம் பகுதியில் காட்டுத் தீ கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் காப்புக் காடானது, 1,338.73 ஹெக்டர் பரப்பளவில் காய்ந்த புற்களும், பூத்து காய்ந்த மரங்களும், மூங்கில்களும் அதிகமுள்ள

[டாக்டர் மா. மதிவேந்தன்] [2023 ஏப்ரல் 18

பகுதியாகும். தீ ஏற்பட்ட நாள் முதல் வனச் சரக அலுவலர்கள், தீ தடுப்புக் காவலர்கள், வேட்டை தடுப்புக் காவலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் என 40 பேர் கொண்ட குழு தீயை அணைக்க தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் காய்ந்த புற்கள் என்பதால், காட்டுத் தீயானது வேகமாகப் பரவியது. மலைப் பகுதிகளிலும், செங்குத்தான மலைப் பகுதிகளிலும் போராட்டக் குழுவினர் அணுக முடியாத நிலையில், வேகமாக பரவி வந்தது. வேகமாகப் பரவி வந்த தீயை அணைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, இந்த நிலையில் மாவட்ட நிர்வாகத்தின்மூலம் சூலூர் விமானப் படையின் உதவியை நாடி, helicopter ரகம் Mi-17V5 உதவியுடன் 16-4-2023 அன்று காலை 6-30 மணியளவில் Bambi Bucket-மூலம் நீரை ஊற்றி தீயை அணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பெரும்பகுதி தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நண்பகல் 12-00

மேலும், கோவை கோட்டப் பணியாளர்களுடன் இணைந்து, தீயை அணைக்கும் பணியில் நீலகிரி, ஈரோடு, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி என ஐந்து கோட்டப் பணியாளர்கள், பொதுமக்கள், மலைவாழ் பழங்குடியின மக்கள், தீயணைப்புத் துறை வீரர்கள் உள்ளிட்ட 210 பேர் தொடர்ந்து ஐந்து நாட்கள் இரவு-பகல் போராடி பல்வேறு பகுதிகளில் பரவிய தீயைக் கட்டுப்படுத்தினர். இதுவரையில் சுமார் 200 ஹெக்டேர் பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் காய்ந்த புற்களும், பூத்துக் காய்ந்த மூங்கில்கள் மட்டுமே பெரும்பாலும் பாதிப்படைந்துள்ளன. விலை உயர்ந்த மரங்கள், சோலைக் காடுகள் மட்டுமல்லாமல் வன விலங்குகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தீயணைப்புப் பணியினை வனத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், கோவை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வன அலுவலர், ஆனைமலை புலிகள் காப்பக வனப் பாதுகாவலர் போன்ற உயர் அலுவலர்கள் களத்திலிருந்து தீயணைப்புப் பணியினைத் துரிதப்படுத்தி, கிட்டத்தட்ட 90 சதவிகிதத் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கோடை காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளை உடனடியாகத் தடுப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 4 முதல் 5 கண்காணிப்புக் குழுக்கள்

2023 ஏப்ரல் 18] [டாக்டர் மா. மதிவேந்தன்]

அமைக்கப்பட்டுள்ளன. இதில் 20 முதல் 25 நபர்கள் இந்தத் தீ தடுப்புப் பணிகளை மேற்கொள்வார்கள் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரையுள்ள ஏ.வி.எம். கால்வாய், ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. ராஜேஷ் குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய நீண்டகால கோரிக்கையான கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை, குளச்சல், மண்டைக்காடு வரை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதைக் கேளுங்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ளதை மட்டும் வாசித்துவிட்டு அமருங்கள். இரண்டு கேள்விகள் இருக்கின்றன.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இரையுமன்துறை வரை உள்ள ஏ.வி.எம். கால்வாயில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS